மனிதனின் நற் குணங்களை அனைத்து விதமான
சுதந்திரத்திற்கும் அவசியமாகும் .

“பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மாண்புக்கு மாய்வது மண்” என்றார் தெய்வப்புலவர்
வள்ளுவர் .

மனிதநேயமானவுள்ள மனிதர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதனால் தான் இவ்வுலகம் அழிந்து போகாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது . என்று விளக்கினார் வள்ளுவர். அதாவது ஒவ்வொரு மனிதனையும் நற்குணங்களே அவனது அனைத்து செயல் சுதந்திரத்திற்கும் அவசியமான காரணியாகத் திகழ்கிறது . ஏனெனில் ஒரு மனிதன் பண்புகளால் அன்பு , தாழ்மை , உண்மை , ஒழுக்கம் , நீதி , நேர்மை ஆகியவை இருந்தால் அவன் தான் உண்மையில் அழகான இதயம் உடையவன் எனக் குறிப்பிடுகின்றனர் சான்றோர் : சக மனிதர்கள் மீது அன்பு , கருணை மற்றும் இரக்கம் காட்டுவதனால் தான் இவ்வுலகில் ஒரு மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ பின்பற்றுவதற்கான சுதந்திரம் இருக்கிறது .

எவ்வாறெனில் ஒரு மனிதனிடம் மன்னிப்பு , பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதநேயமான குணங்கள் மூலம் தான் நாம் விரும்பக்கூடிய ஒரு மதத்தையோ ஒரு சமயத்தையோ பின்பற்ற முடிகிறது . அனைத்து செயல்பாடுகளுக்கும் மனிதனின் நற்குணங்களே அவசியமாகின்றது .

மனிதன் - இது வெறும் வார்த்தை அல்ல.
இயற்கையின் உச்சகட்ட படைப்பு. பல கோடி ஆண்டு
பரிணாம வளர்ச்சியின் விளைவால் இயற்கைக்குக்
கிடைத்த மாபெரும் பரிசு மனிதன் ஆவான்.
வரம்பில்லா வலிமை பெற்ற மனிதன் மனிதமானம்
எனும் மகுடத்தை சூடினால் மட்டுமே வைரமாய்
மிளிர்கிறான்.

மனிதன் என்பவன் நற்குணங்களை கொண்டவனாக
இருக்க வேண்டும். அவ்வாறாயின் மனிதமானம்
மிக்கவனாகவோ மனித நேயம் மிக்கவனாகவோ
இருக்க வேண்டும். அவன் பொறுமை, மன்னிப்பு
மற்றும் நம்பிக்கை போன்ற மனிதமானக் குணங்கள்
கொண்டவனாக வாழ வேண்டும்.

அதாவது சக மனிதனையும் மனிதனாக மதித்து
அவனது உள்ளத்தை புரிந்து உணர்வுகளுக்கு
மதிப்பளிப்பதே மனிதமானம். இதை தான்
"உனக்கு நீ எதைச் செய்ய விரும்ப மாட்டாயோ
அதை பிறருக்கும் நீ. செய்யாதே" என்கிறார்
சீன ஞானி ~~கன்~~ கன்பூசியஸ். இவர் இவ்வடிகளின்
மூலம் மற்ற மனிதர்களை எவ்வாறு மதிக்க
வேண்டும் என்று புலப்படுத்துகிறார்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா ~~செய்தொழில்~~
செய்தொழில்
வேற்றுமையான்"
என்று பாடுகிறார் தெய்வப்புலவர் வள்ளுவர்.

அதாவது மனிதர்கள் எனப்படுபவர்கள் பிறப்பினால் யாவரும் சமன் என்பதாகும். உயர்வு தாழ்வுகள் இல்லாமல் பிற மனிதர்கள் மீது அன்பு பாராட்டும் அந்த உயரிய பண்புடையவனே உண்மையான மனிதனாவான் என்று வள்ளுவர் இந்த அடிகளின் மூலம் விளக்குகிறார்.

எல்லா உயிர்களுக்கும் உயிரோட்டமாக இருந்து இயங்கிக் கொண்டிருப்பது மனித நேயம். மனிதம் இல்லா மனிதன் மனிதனே அல்ல அவன் மனிதனாகவே கருதப்படமாட்டான் என்று ~~இதைப்பற்றி~~ குறிப்பிடுகின்றனர் பெரியோர். மனித நேயம் என்பது எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது ~~என்று~~ என்பதை எம்மால் உணர முடிகிறது.

~~ஒரு சில சமயங்களில்~~
உதாரணமாகக் குறிப்பிடுகையில் ஆறறிவுள்ள மனிதனைப் போன்று ஐயறிவுள்ள விலங்குகள் பல நேரங்களில் தம் இனத்துக்காகப் போராடி தங்களுக்கு மனிதமானம் இருக்கிறது என மெய்ப்பித்துப் போராடும் காட்சிகளை நாம் கண்டிருக்கின்றோம். அதாவது மனிதர்களை விட அறிவில் குறைந்தது அம் மிருகங்களும் பல சமயங்களில் மனிதமானத்துடன் செயற்படுகின்றன. அறிவில் உயர்ந்த நாம் ~~மனித~~ எவ்வாறான விதத்தில் மனிதமானத்துடன் செயற்பட வேண்டும் என்பதை எம்மால் அறிய முடிகிறது.

மனிதநேயமானங்கள் அதாவது மனிதநேயம் தொடர்பாக பலங்காலம் தொட்டு அறிஞர்களால் மிகச் சிறப்பான கருத்துக்களால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் சங்கமருவிய காலத்தில் ~~எழு~~ எழுந்த அறநூல்கள் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. அவற்றுள் முதன்மையானது தெய்வப்புலவர் திருவள்ளுவரின் திருக்குறளாகும். இந் நூலில் பல்வேறும் கருத்துக்களால் மனிதநேயமானத்தை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை யாவர்க்குமாம்
பசுவுக்கொரு வாயுறை யாவர்க்குமாம்
உண்ணும் போதொரு கைப்பிடி யாவர்க்குமாம்
பிறர்க்கு இன்னுரை தானே".

என்று வள்ளுவர் திருமந்திரத்தில் மனிதநேயமானங்கள் தொடர்பாக நற் வாசகங்களை மனிதர்களாகிய நமக்கு நற் இனம் எவ்வாறானது என்று உணர்த்தியுள்ளார்.

அதே போன்று "யாதுமூரே யாவரும் கேளிர்" என்று உலகத்திற்கே மனிதநேயமானங்களை ~~எடு~~ எடுத்துக்காட்டி தமிழர்கள் வாழ்ந்துள்ளதாக பெரியார்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான கருத்துக்களால் மனிதநேயமானம் என்பது எவ்வாறு முக்கியத்துவமுடையது என்று பலங் காலந்தொட்டு சான்றோர்கள், பெரியோர்கள், தத்துவ ஞானிகள் என்று பலரும் குறிப்பிட்டுள்ளதை நாம் அறிந்துள்ளோம்.

Date No

மனிதாபிமானம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது நம்மில் பலரும் இவரை நேரில் கூட கண்டிராத அன்னை தெரசா, அப்துல் கலாம் மற்றும் காந்தியடிகள். இம் மாமனிதர்களை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் இவர்கள் "தனக்குப் போகத் தான் தானமும் தருமமும்" என்ற தகைமையைத் தாண்டி தன் வாழ்வை முழுவதுமாக சமூகப் பணிகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டதே. இதனாலே இவர்களைப் பற்றி இன்றும் பேச வைக்கிறது. இப் பெரியார்கள் ~~கொண்டிருந்த~~ நம்பிக்கையும், மன்னிப்பு மற்றும் பொறுமை போன்ற மனிதாபிமானக் குணங்களை கொண்டிருந்ததனாலும் சமூகத்தில் சிறப்பான முறையில் மனிதர்களுடன் வாழ்ந்து விட்டு சென்றமையாலும் ~~அன்று~~ இன்று இவர்களைப் பற்றி நாம் கொண்டாடுகின்றோம்.

அதாவது மனிதம் என்பது மனித நேயத்தை குறிக்கும் வளமான சொல். மனித நேயம் என்பது புனிதம் நிறைந்த செயல். புண்ணியம் தேடி புனிதம் அடைய நினைப்பவர்கள் மண்ணில் மனிதனை நாடி கருணை உள்ளத்துடன் நடந்து கொண்டாலே போதும் புண்ணியம் கோடி கிடைக்கும். ஆகவே மண்ணில் வாழும் காலத்தில் ஒவ்வொரு சக மனிதர்களுடனும் நற்குணங்களுடனும் அன்பு பாராட்டுடனும் நாம் நடந்து கொள்ள வேண்டும்.

அன்பு என்பது இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்டிருக்கும் அன்னியோன்யம், ஆறுதல், நேர்மறை உணர்வு, இரக்க சிந்தனை, கருணை உள்ளம், சமூக அக்கறை, என்றும் அன்புடன் நடந்து கொள்ளும் முறை. இவற்றுக்கே மனிதம் என்றும் மனித நேயம்

ProMate

என்றும் போற்றப்படுகின்றது. இவற்றையுள்ள அம்சங்கள் சக மனிதர்களை பரிபூரணமாக பராமாற்றப்பட்டால் மனித நேயம் என்றும் பசுமையாக இருக்கும். இவற்றில் ஒன்று குறைந்தாலும் மனித நேயத்தில் விரிசல் ஏற்படுகிறது. இவ்வாறான விதங்களால் விரிசல்கள் ஏற்படாமல் இருக்க மனிதர்கள் ஒவ்வொருவரும் மனித நேயத்துடனும் நற்குணங்களுடனும் செயற்பட்டால் சக மனிதர்களிடையே ஒற்றுமை மேலோங்கும்.
~~இவ்வாறுள் ஒற்றுமையில்~~

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடையே மனிதநேயமானது அருகிக் கொண்டே செல்கிறது. ஏனெனில் ஒருவருக்கு ஒருவரிடையில் புரிந்துணர்வு அற்ற நிலை மற்றும் மன்னிப்பு வழங்காமை போன்ற காரணங்களினாலும் இன்னும் மனிதர்கள் செய்யும் தவறுகளாலும் மனிதர்களிடையே விரிசல் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இதுவே இன்றைய நவீன உலகில் மனிதநேயமானது அருகிக் கொண்டு போக காரணமாகிறது.

இது போன்று மனிதர்களிடையே மத பிரச்சினை, மொழிப் பிரச்சினை, நாடுகளுக்கிடையேயான பிரச்சினை, நிற பேதம் மற்றும் சாதி பேதம் என வகையான பேதங்களால் அதிகாரப் போட்டிகளினால் இவ்வுலகம் இரண்டு பெரும் உலகப் போர்களை சந்தித்தது மற்றும் பல உயிர்களையும் இழந்தது. மனிதர்களுக்கு மனிதர் அன்பு பாராட்டுவதற்கு பதிலாக வெறுப்பையும் காழ்ப்புணர்ச்சியையும் உருவாக்குகின்றனர். இவ்வாறான விதங்களால் தீய அபிப்பிராயங்கள் மற்றும் எண்ணங்களை உருவாக்குகின்றனர்.

இது போன்ற அதிகாரப் போட்டி , பொருளாதாரப் போட்டி இவை மட்டுமன்றி இவ்வாறான காரணங்களாலே மனிதர்கள் நற்குணங்கள் இல்லாது சண்டையிட்டு கொள்ளும் மிருகங்களாக மாறியுள்ளனர் . சக மனிதர்களை கொலை செய்தல் , பெண்களை துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் சிறுவர்களை துன்புறுத்தல் , வேலைக்கமர்த்தல் . இவை போன்ற மிருகத்தனமான செயற்பாடுகளில் மனிதன் ஈடுபட்டு வருவது மன வேதனைக்குரிய விடயமாக உள்ளது .

அதாவது அனைத்து மதங்களும் , சமயங்களும் , கோட்பாடுகளும் மனிதநேயமான சிந்தனைகளை விதைத்திருக்கின்றன . விதைகளும் வேர்களும் என்றும் மறைந்து தான் இருக்கும் . அதன் மேல் வளரும் கிளைகளும் , பூக்களும் , ~~கனி~~ கனி வகைகளும் காட்சி தருகின்றன . அனைத்து மதத்தவர்களும் கிளைகள் , பூக்கள் , கனி வகைகள் போன்று பார்ப்பவர்களுக்கு என்றும் பசுமை நிறைந்த கண்கவர் காட்சியையும் கண்குளிர்ச்சியையும் தருவது அவர்களின் ~~தார்மீ~~ தார்மீகப் பொறுப்பாகும் . ~~மனிதர்களாக~~ மனிதர்களாகிய நாம் அனைவரும் இவ் விடயத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் .

மனிதநேயத்திற்கு இணையான பொருள் அல்லது செல்வம் இவ்வுலகத்தில் எதுவும் கிடையாது . நாம் விரும்பக் கூடிய அனைத்து செயற்பாடுகளுக்கும் நற்குணம் அவசியமாகும் . இதற்கு நல்ல மனம் வேண்டும் நல்ல உணர்வு வேண்டும் அவ்வெண்ணத்தை புதுப்பிக்கக் கூடிய நல் புத்தியானது இருக்க வேண்டும் .

மனிதாபிமானம் உயர்வாக உள்ள மனிதர்கள் இதயத்தினால் சிந்தித்து புத்தியினால் அதை உணரவும் செய்வார்கள். இதைதான் மகாத்மா காந்தி செய்தார். அன்னை தெரசாவும் செய்தார். அப்துல் கலாமும் இதனையே செய்தார்கள். இம் மாமனிதர்களின் மனதில் உயர்வாக மனிதாபிமானம் காணப்பட்டமையால் ~~மக்கள்~~ இவர்கள் தங்கள் இலட்சியத்தை அடைந்து உலகிலே வெற்றி பெற்றார்கள்.

மனித நேயத்தை இவ்வாறு பட்டியல் போட்டுக் கொண்டு போனால் பேனாவும் தீர்ந்துவிடும் பேசும் வார்த்தைகளும் ~~முடிந்து வரும்~~ முடிந்துவிடும். ஆகவே உண்மையான மனித நேயத்துக்கு விருப்பும் கிடையாது வெறுப்பும் கிடையாது. எனவே நம் ஒவ்வொருவரினதும் மனதிலும் நற் குணங்கள் உயர்வாக இருக்க வேண்டும். மனிதாபிமானத்தை காப்போம் நாம் ஒவ்வொருவரும் மனிதாபிமானத்துடன் இருப்போம். அனைத்து மனித செயற்பாடுகளுக்கும் மனிதாபிமானக் குணங்களே முக்கியத்துவமாகின்றது.